**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No.70 of 2021**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW4** |
| **Name of the Witness** | : | பாலகிருஷ்ணன் |
| **Father's Name** | : | ராமலிங்கம் |
| **Age** | : | 55 |
| **Occupation** | : | |
| **Address** | : | 271, மாரியம்மன் கோயில் தெரு, கிழக்கு ராமாபுரம், கடலூர் தாலுக்கா |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 30th day of November, 2023.

குறுக்குவிசாரணை

1. தனகோடி எனது உறவுக்காரர். அவர் எனது மைத்துனி. அவரது தங்கையை நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. பங்காளி உறவு முறையில் அவர் எனக்கு மைத்துனி உறவுமுறை. நான் கையெழுத்து போட்ட ஆவணம் என்னவென்று தெரியுமா என்றால், அது ஒரு உயில். நான் கையெழுத்து போட்டு மூன்று வருடம் இருக்குமா என்றால் இருக்கும். 07.02.2020 அன்று கையெழுத்து போட்டேன். யார் என்னை சாட்சி கையெழுத்து போட அழைத்தார்கள் என்றால், தனகோடி அம்மாள் தான் அழைத்தார். அந்த உயிலில், நானும், வேலுசாமி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த உயிலில் என்ன எழுதியுள்ளது என தெரியுமா என்றால், சொத்தினை ராமசாமி அடையவேண்டுமென எழுதப்பட்டிருந்தது. நான் கையெழுத்து போட்ட உயிலில் சொத்து விவரம் இருந்ததா என்றால் இருந்தது. சொத்து விவரம் எதனை பார்த்து எழுதப்பட்டது என்றால், அசல் பத்திரத்தை தனகோடிஅம்மாள் எழுத்துக்காரரிடம் கொடுத்தார், அதனடிப்படையில் சொத்து விவரம் எழுதப்பட்டது. உயில் எழுதப்பட்ட காலத்தில், தனகோடி அம்மாள் உடல்நலக்குறைவுடன் காணப்பட்டாரா, அல்லது நன்றாக இருந்தாரா

என்றால், நல்ல நிலையில் இருந்தார். உயில் எழுத ஆரம்பித்த சமயத்திலிருந்து நான் இருந்தேனா அல்லது கடைசி நேரத்தில் வந்து சேர்ந்துகொண்டேனா என்றால், ஆரம்பம் முதலே நான் இருந்தேன். நாங்கள் மூவரும் ஒன்றாகத்தான் இருந்தோம். என்ன காரணத்திற்காக அந்த உயிலை தனகோடி அம்மாள் அந்தசமயத்தில் எழுதினார் என்றால், தனக்கு பின்னிட்டு வாரிசுகள் இல்லாததால், தன் தம்பியின் பெயருக்கு உயில் மூலம் சொத்து அளிப்பதற்காக, உயில் ஆவணத்தை ஏற்படுத்தினார். தனது உடல்நிலையை பற்றி, தனகோடி அம்மாள் அந்த உயிலில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளாரா என்றால், இல்லை. உயில் ஆவணம் முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்றால் இல்லை, பச்சை தாளில் எழுதப்பட்டது. உயில் எழுதி முடிக்கும்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால், மாலை நான்கு மணி இருக்கும். அந்த உயில் ஆவணம் பதிவு அலுவலகத்திற்கு கொண்டு சென்று, பதிவு செய்யப்படவேண்டும் என பேசப்பட்டதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதும்போது, எழுத்துக்காரரிடம் அளித்த அசல் ஆவணங்களை யார் திரும்ப பெற்றுக்கொண்டார்கள் என்றால், தனகோடி அம்மாளே திரும்ப பெற்றுக்கொண்டார். தனகோடி அம்மாள் எவ்வித உயில் ஆவணத்தையும் வாதி ராமசாமி பெயருக்கு எழுதி வைக்கவில்லையென்றும், எனவே, தனகோடி அம்மாள் உயில் ஆவணம் எழுதி வைத்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் குறிப்பிடும் உயில் ஆவணத்தில் உள்ள கைரேகை, தனகோடி அம்மாளின் கைரேகை அல்ல என்றும், நான்தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நானும் வேலுசாமியும், வாதி ராமசாமியுடன் சேர்ந்து, இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு, நாங்கள் சேர்ந்து உற்பத்தி செய்த மோசடியான ஆவணம் தான், நான் சாட்சியம் அளிக்கும் உயில் ஆவணம் என்றால் மறுக்கிறேன்.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

| |
|---|
| *Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*<br>*Sd/-S.Prakash*<br>*I Additional District Judge*<br>*Cuddalore.* |